[1989 ஏப்ரல் 3

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கும் திட்டம்.

19—(*வினா எண் 164) திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இந்து சமய ஆகமங்களில் பயிற்சிபெற்ற அனைவரையும், ஜாதி வேறுபாடின்றி அர்ச்சகராக நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளது.

(ஆ) திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், இந்து சமய அறநிலையச் சட்டப்படி பரம்பரை உரிமையுடையவர்களாக இருந்து வந்தனர். 1971ஆம் ஆண்டு அப்போதிருந்த தமிழக அரசு நிறைவேற்றிய சட்டத் திருத்தத்தின்படி, அர்ச்சகர்களுக்குப் பரம்பரை உரிமை நீக்கப்பட்டது. ஜாதி வேறுபாடின்றி, அர்ச்சகர்களும், இதர பணியாளர்களும் நியமனம் செய்வது குறித்து ஆராய்ந்து, அரசுக்கு ஆலோசனை கூறுமாறு, நீதிபதி டாக்டர் எஸ். மகாராஜன் தலைமையில் வல்லுநர் குழு ஒன்றினைத் தமிழ்நாடு அரசு 1979-ல் நியமித்தது. வல்லுநர் குழு, 1982-ல் அறிக்கை தந்தது. அந்தக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப, அரசியல் சட்டத்தின் 25-வது பிரிவில் ஒரு திருத்தம் கோரி, மைய அரசுக்கு மாநில அரசு கடிதம் எழுதியது. இம் மாநில அரசு கோரியது போல, திருத்தம் செய்வது இந்திய அரசியலமைப்பின் அடிப்படையையே மாற்றுவது போலாகிவிடும் என்று தெரிவித்து இம்மாநில அரசின் கோரிக்கையை மைய அரசு நிராகரித்துவிட்டது. இது குறித்து, மீண்டும் சட்டத் துறையுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது. இக் குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதற்கான விவரங்களைச் சேகரித்து மீண்டும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 25-வது பிரிவினைத் திருத்துவதற்கான தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவரர்களே, அமைச்சரவர்கள் சொல்கின்ற நேரத்தில் எல்லா சமயத்தைச் சேர்ந்தவர்களையும் அர்ச்சகர்களாக நியமிக்கின்ற உத்திரவு ஏறகனவே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்

கள். அப்படியானால் எத்தனை ஆதிதிராவிட மக்கள் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், எத்தனை பிற்படுத்தப்பட்டவர்கள் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினரவர்கள் என்னுடைய பதிலைச் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை. எல்லா சமயத்தைச் சேர்ந்தவர்களையும் அர்ச்சகர்களாக இந்து சமயத்தில் நியமிக்க முடியாது. அதுபற்றி இந்த அரசின் ஆய்விலே இருக்கின்றது. மத்திய அரசு, இதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு குழு அரசியல் சட்டம் 25-வது பிரிவை திருத்தினால்தான் மேற்கொண்டு அரிசனங்களை இதிலே நியமிக்கும்போது விவகாரங்கள், பிரச்சினைகள் உச்சநீதிமன்றம் வரை செல்லாது என்ற எண்ணத்தோடு மைய அரசைக் கேட்டு, மைய அரசு மூலமாக தமிழக அரசு அரசியல் சட்டம் 25-வது பிரிவுக்குத் திருத்தம் 1982-ம் ஆண்டிலே கோரியுள்ளது. ஆகவே இன்னும் அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம் என்று மாண்புமிகு அவைத் தலைவரவர்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்து அறநிலையத் துறையில் அர்ச்சகர்களாக எல்லா சாதியினரும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், அதிலே சில சட்டச் சிக்கல்கள் இருப்பதாகவும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்து ஆகமப் பயிற்சி பெற்றுக்கொள்வதற்கு ஏதாவது பயிற்சி முகாம்கள் இங்கே நடைபெறுகின்றனவா? அதோடு வேலைவாய்ப்பில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்தத் துறையிலே விகிதாச்சாரப்படி முறையே வேலைகள் கொடுப்பதற்கு இந்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் 1982-ல் நீதிபதி டாக்டர் எஸ். மகாராஜன் தலைமையிலே ஒரு வல்லுநர் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரையின் பேரில்தான் மைய அரசுக்கு எழுதப்பட்டது. அதற்குப் பிறகு நீதிபதி திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையிலே ஒரு குழு நியமிக்கப்பட்டு அது இப்படி அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர்களாக நியமித்தால், அவர்களுக்கு இந்து சமய ஆகமங்களிலே பயிற்சி கொடுக்க வேண்டுமென்றும், அதுவும் குறிப்பாக பழனி கோவிலில் அப்படிப்பட்ட ஒரு கல்லூரியை நிறுவ வேண்டுமென்ற பரிந்துரையையும் நமக்குக் கொடுத்திருக்கின்றது. அந்தப் பரிந்துரையை ஏற்று 5 ஆண்டுகள் பயிற்சி கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதை ஏற்று பயிற்சி கொடுத்தால், பயிற்சி முடிந்த பிறகு—இப்போதிருக்கின்ற சட்டப்படி—அரசியல் சட்டம் 25-வது பிரிவு திருத்தப்படுவதற்கு முன்னாலே நியமித்தால் விவகாரங்கள், பிரச்சினைகள் உருவாகும் என்ற காரணத்தாலே, அந்தப் பயிற்சி

முடிந்தபிறகு என்ன செய்வது என்ற எண்ணத்தைக் கருத்திலே கொண்டு இப்போது அந்தக் கல்லூரி பழனியிலே தொடங்கப்பட வில்லை.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் அர்ச்சகர்கள் எல்லா சாதிகளிலேயும் இருக்கிறார்கள். இன்றைக்கு திருச்சி, அரியலூரில் கலியுக வரத ராஜப்பெருமாள் கோவில் இருக்கிறது. அங்கு வன்னியர்களும், படையாச்சியினரும் பூஜை செய்கிறார்கள். இன்றைக்கு சேலம் மாவட்டம் காளிப்பட்டியில் கவுண்டர்கள்-அவர்களில் சில ஐ.ஏ.எஸ்., ஐ.சி.எஸ்., குடும்பத்தைச் சார்ந்தவர்கள் உற்சவம் நடக்கும்போது பூஜை செய்கின்றார்கள். அதுமாதிரி சிறுவாச்சியூரில் முத்துராஜாக்கள் பூஜை செய்கிறார்கள். இப்போது நம்முடைய அறநிலையத் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள் பழனியை எடுத்துக்கொண்டால் அங்கே பண்டாரமும் சேர்ந்து தான் அர்ச்சகத் தொழில் பண்ணுகிறார்கள் என்று, இதிலே எல்லாக் கோவில்களிலேயும் அரிசனங்களும் பூஜை பண்ணுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்களா அல்லது இப்போதுள்ள ஆகம விதி சரியான முறையிலே-ஆகம விதி பயிற்சி என்று சொல்வதற்காக நான் ரொம்ப சந்தோஷப்படுகிறேன். ஸ்ரீரங்கம் கோவிலையும் சேர்த்து எத்தனை கோவில்களிலே, ஆகம விதி படித்தவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, இந்த அரசினுடைய திட்டம், கொள்கை, எல்லாக் கோயில்களிலும், இந்து சமயக் கோயில்களிலும் ஆகமங்களை, இந்து சமய ஆகமங்களைப் படித்துப் பயிற்சி பெற்றவர்களைத்தான் நியமிக்க வேண்டும் என்பது. அது எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி. அப்படி அந்த ஆகமத்தில் பயிற்சி பெற்றவர்களைத் தான் நியமிக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை.

திரு. வ. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இன்னும் அநேக கோயில்களில் வட மொழியிலே அர்ச்சனை செய்யப்படுகிறது. எல்லாக் கோயில்களிலும் கட்டாயமாக ஒரு அர்ச்சகராவது தமிழில் அர்ச்சனை செய்யக் கூடியவர் நியமிக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தை நம்முடைய அரசு நிறைவேற்றுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, கோயில்களிலே தமிழில் அர்ச்சனை செய்யலாம் என்ற தமிழக அரசு விதி இருக்கிறது. இன்றைக்கும்கூட பல கோவில்களிலே சமஸ்கிருதத்திலே அர்ச்சகர்கள் அந்தப் பூஜையைச் சொல்லி முடித்த பிறகு, ஓதுவார்கள் தமிழிலேதான் பல கோயில்களிலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

1989 ஏப்ரல் 3]

திரு. கே. ரமணி : தலைவரவர்களே, ஏற்கனவே அரசியல் சட்டம் விதி 25-வது பிரிவைத் திருத்த வேண்டுமென்று இங்கிருந்து தமிழக அரசு சிபார்சு செய்தும் அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் மத்திய அரசு இருப்பது என்பது அடிப்படை உரிமையையே மீறக்கூடிய ஒரு அம்சம் அல்லவா என்று நாம் பரிசீலனை செய்யத் தேவை இல்லையா? தேவை உண்டு என்று அரசு கருதுகிறதா? ஏனென்றால் ஒரு தொழிலை-எந்தத் தொழிலையும் இந்த நாட்டில் செய்வதற்கு அத்தனை பேருக்கும் உரிமை உண்டு. ஆகமங்களை அல்லது வேத சம்பந்தமான மற்ற அம்சங்களைப் படித்தவர்கள்தான் கோவில் பூசை செய்யலாம் என்றால் அது ஒரு ஸ்பெஷல் குவாலிஃபிகேஷன், அவர்கள் மதத்தின் சார்பிலே போடக்கூடியது. ஆனால் சிறு சாதாரண தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ள கோயில்களிலிருந்து உயர்மட்டத்தில் இருக்கிற உயர்ரகக் கடவுளுடைய கோயில்கள் வரை இன்றைக்குப் பூஜைகள் நடத்தும்படியான அத்தனை பேர்களும் ஆகமங்களிலே தேறியவர்கள் அல்ல. அதற்கான அத்தாட்சியோ மற்றதோ கொடுத்து எல்லாக் காரியமும் செய்வது இல்லை என்பதை நாம் கண்ணாலே பார்க்கிறோம். ஆகவே, ஒரு தொழில் செய்வதையே, —அரசியல் சட்டத்தின் மூலம் அதைத் திருத்துவதற்கு மறுப்பதன் மூலம்—தடுப்பது என்ற அந்தத் தவறான போக்கை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று அந்தத் திருத்தத்தை மத்திய சர்க்கார் செய்ய வேண்டுமென்று இந்தச் சபையிலே ஒரு தீர்மானத்தைப் போட்டு அனுப்புவதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, இங்கே மதிப்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் எழுப்பிய பிரச்சினைகள் இரண்டு. ஒன்று, எல்லாக் கோயில்களிலும் ஆகமங்களிலே பயிற்சி பெற்றவர்கள்தான் நியமிக்கப்பட வேண்டுமா என்பது. எல்லாக் கோயில்களிலும் அல்ல. கிராமங்களில் எனக்குத் தெரியும், சின்னச் சின்ன கோயில்கள் இருக்கின்றன. அரிசனங்களே நடத்துகின்ற கோவில்களும் இருக்கின்றன. இன்னும் எத்தனையோ ஜாதியைச் சேர்ந்தவர்கள் நடத்துகின்ற சிறிய சிறிய கோயில்கள் இருக்கின்றன. அந்த ஊரிலே உள்ளவர்கள்தான் அங்கே பூசை செய்கிறார்கள். அங்கேயெல்லாம் அரசு நியமனம் தேவையில்லை. ஆனால் நியமிக்கப்படுகின்ற இடங்களிலேதான் நான் சொன்னேன். ஆகமங்களிலே பயிற்சி பெற்றவர்களை நியமிக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை சமயச் சான்றோர்களிடம் இருக்கிறது. அதை ஏற்றுக்கொள்வது நல்லது என்று இந்த அரசு கருதுகிறது. இரண்டாவது பிரச்சினை மைய அரசு இந்தச் சட்டத் திருத்தத்தை மறுப்பது நியாயம் தானா என்ற கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள். இங்கே நான் முதலிலே பதில் சொன்ன பொழுதே படித்தேன். இது குறித்து மீண்டும் சட்டத் துறையுடன் கலந்து ஆலோசிக்கப் பட்டது. இக்குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதற்கான விவரங்களைச் சேகரித்து மீண்டும் அரசியல் அமைப்புச் சட்

டம் 25-வது பிரிவைத் திருத்துவதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என்று சொன்னேன். இங்கே உறுப்பினர் வற்புறுத்தினால் இந்தச் சபையிலேயே அதற்கான ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவது பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஆகம விதி படித்தவர்களை அர்ச்சகர்களாக நியமிப்பது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். படித்திருந்தால் மட்டும் போதாது. ஒழுக்க நெறியும், சமய நெறியும், பக்தி நெறியும், அந்தச் சமயத்தில் பற்றும் இருப்பவர்களாகப் பார்த்து நியமிக்கப்பட வேண்டும் என்பதால் அமைச்சர் அவர்கள் இதிலே என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஐந்தாண்டுகள் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டுமென்ற எண்ணம் வந்தாலே அவர்களுக்கு ஒழுக்க நெறி இருக்கும் என்றுதான் நான் கருதுகிறேன். ஒழுக்கமும் அவசியம் என்று இந்த அரசு கருதுகிறது.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, அர்ச்சகர்கள் ஆவதற்கு ஆகம விதிகள் தெரிந்திருக்க வேண்டுமென்ற நியதி தவறுடையது அல்ல. 'ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க' என்று இறைவனே ஆகமமாக நிற்கிறான். ஆகமத்தினுடைய முழு வடிவமாக நிற்கிறான் என்பது நமது தமிழ் சான்றோர்கள் சொன்ன பொன்னான வாசகங்கள் ஆகும். நீரும், பூவும் எடுத்து நாள்தோறும் கோவிலைச் சுற்றி வந்து வழிபடுகிறவர்கள் அந்தக் காலத்தில்கூட எல்லா சாதியினரும் இருந்தார்கள் என்பதை நான் இங்கே சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அந்த அளவிற்கு இருந்தார்கள். தமிழ் ஞான சம்பந்தன் என்று பொற்றாளம் பெற்ற அந்தத் தமிழ் மறையோன் அந்தண வகுப்பைச் சார்ந்தவராக இருந்தாலும்கூட அவர் தமிழ் ஞான சம்பந்தன் என்று புகழ் பெற்றதையும், பெயர் பெற்றதையும் நாம் அறிவோம். ஆக, ஆகமப் பயிற்சி தேவை என்பதையும், தமிழிலே வழிபாடு தேவை என்பதையும் வலியுறுத்துகிற வகையில் இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழிலே வழிபாடு செய்கிற நேரத்திலேதான் சாதாரண மக்களுக்குக்கூட நெஞ்சு நெக்கு நெக்கு உருகி, பக்திச் சுவை சொட்ட சொட்ட இறைவனோடு இரண்டற கலக்கிற ஒரு இதயம் கிடைக்கும் என்ற காரணத்திற்காகத்தான் அவ்வாறு சொல்லப்படுகிறது. அதனாலே, இன்னொரு மொழியிலே அர்ச்சனை செய்வது தவறு என்றோ, அர்ச்சனை செய்யக் கூடாது என்றோ இல்லை. எனவே தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்பதையும், விரும்பினால் வடமொழி போன்றவற்றில் அர்ச்சனை செய்யப்படும் என்பதையும், இந்த இரண்டையும் நாம்

வலியுறுத்துவதோடு, முன்பு எப்படியிருந்தாலும், ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் இப்போது அரிசனங்களுக்குக்கூட ஆகமப் பயிற்சி அளித்து, அர்ச்சகர்களாக்குகிற ஒரு திட்டத்தை நடத்திக் கொண்டு வருகிறார் என்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : இந்த நீண்ட உரையிலே, தலைவர் அவர்களே, கேள்வி எது என்பதைச் சுருக்கமாகத் தாங்களாவது சொல்ல வேண்டும். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதுதான் இலக்கியப் பேருரை ஆற்றிக் கொண்டிருக்கிறார். அதிலே நான் கூட நெக்கு நெக்கு உருகிப் போனேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்ன கருத்துக்கள் அரசுக்குத் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உரிமம் இல்லாமல் பாம்புத் தோல் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை.

20*—(வினா எண் 231)—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் 1988–89-ல் வனவிலங்கு பாது காப்பு அதிகாரிகளால் உரிமம் இல்லாமல் பாம்புத் தோல் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, (அ) சென்னையில் 1988—89-ல் உரிமம் இல்லாமல் பாம்புத் தோல் வைத்திருந்ததாக 12 பேர் கைது செய்யப் பட்டனர்.

(ஆ) கைது செய்யப்பட்டவர்கள் 15 நாட்கள் காவலில் வைக்கப்பட்டு பிறகு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர். நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது.